In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 337/2017 |
| PW: | 5 |
| காவல் நிலையம்: | எட்டயபுரம் |
| தேதி: | 23-01-2026 நாள்: வெள்ளி |
| பெயர்: | மாரியப்பன் |
| த/பெ: | சங்கரப்பாண்டியன் |
| கிராமம்: | சிங்கிலிப்பட்டி |
| தாலூகா: | எட்டயபுரம் |
| வேலை: | டிரைவர் |
| வயது: | 44 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2026**

(Accused absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**முதல்விசாரணை**

1) நான் சிங்கிலிப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். சுமார் 5 வருடத்திற்கு முன்பு ஒரு நாள், சிங்கிலிப்பட்டி வேலிடுடைப்பட்டிக்கு இடையே பாலம் அருகே பொண் பாண்டி சென்ற இருச்சக்கர வாகனத்தில் அவரது பாட்டியும், அவரது அப்பாவும் பயணம் செய்து கொண்டிருக்கும் போது எங்கள் ஊரைச் சேர்ந்த அஜித் குமார் பைக்கில் சென்று கொண்டிருக்கும் போது அஜித் குமார் வந்த பைக் பொண் பாண்டி சென்ற இருச்சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியது என்று எங்கள் ஊர்க்காரர்கள் கூறினார்கள். போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) முதல் விசாரணையில் கூறியதை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேனா என்று எனக்கு தெரியாது.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.